

மதுரை மாநகராட்சி ஆத்திக்குளம் பகுதியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய தார்சாலை பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாமன்ற உறுப்பினர் செந்தில், அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

### இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திட

# கலைஞருக்கு புகழ் சேர்த்திடும் பணியை இன்றே தொடங்குவோம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

சென்னை, ஜூன் 22-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திருவாரூர்த் தேரழகைத் தன்னகத்தே கொண்ட பேரழகாம் கலைஞர் கோட்டத்தின் திறப்பு விழா, கலைஞர் பிறந்த மண்ணில்!**

**கவியரங்கம், பட்டிமன்றம், பாட்டரங்கம், வாழ்த்தரங்கம் எனச் சொற்களாலும் எழுத்துகளாலும் நம் எண்ணங்களில் நிலைகொண்டு எங்கும் நிறைந்து விட்ட முத்தமிழ் வித்தகர் கலைஞர் 100இல், மாண்புமிகு பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்களோடு கலைஞர் கோட்டம் திறந்து வைத்தோம்.**

**நீடுபுகழ் கலைஞரின் வண்மையைக் காட்சிப்படுத்தும் இந்த எழிலோவியம் அமையக் காரணமான அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!**

**தலைவர் கலைஞரின் கொள்கை வாரிசுகளே!**

**இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடும் வரலாற்றுக் கடமையை நிறை வேற்றிக் கலைஞருக்குப் புகழ்சேர்த்திட இன்றே பணி தொடங்குவோம்! இலட்சியம் வெல்வோம்! நாட்டைக் காப்போம்!**

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# நிதி நுட்ப நகரம் ஒப்பந்தப்புள்ளி ஏலமுறை குறித்து விளக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன்.22-

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியினை பன்மடங்கு பெருக்கி படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கிட தமிழ் நாடு அரசு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக சென்னை, நந்தம்பாக்கத்தில் நிதி தொழில் நுட்ப நகரம் ஒன்று அமைத்திட முடிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின் இரண்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. தமிழ்நாட்டினை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எடுத்துச்செல்லும் இத்திட்டம் குறித்து சில சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இதில் முதல் திட்டமானது, 56.48 ஏக்கர் நிலப்பரப்பில், நில மேம்பாடு மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுவதற்கான திட்டம் ஆகும். நில மேம்பாடு, உட்புற சாலைகள், மழை நீர் வடிகால் வசதிகள், வெள்ளத் தடுப்புச்சுவர், குடிநீர் மற்றும் மறுசுழற்சி நீர் வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள், பாதுகாப்பு வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகள் இதில் மேற்கொள்ளப்படும். மின்னணு ஒப்பந்தப்புள்ளி தேர்வின் அடிப்படையில், துறை மதிப்பை விட 16.34% குறைவாக அதாவது, 82.87 கோடி ரூபாய் (ஜி.எஸ்.டி உட்பட) மதிப்பீட்டில் நிதிநுட்ப நகர திட்டத்திற்கான கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பணி ஆணை PST நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டமானது, 5.60 இலட்சம் சதுர அடியில், நிதிநுட்ப கோபுரத்திற்கான கட்டுமான பணிகளை மேற்கொள்ளுவதற்கான திட்டம் ஆகும். இதற்கான பணி ஆணை 151.55 கோடி ரூபாய் (ஜி.எஸ்.டி உட்பட) மதிப்பீட்டில் மின்னணு ஒப்பந்த புள்ளி தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட் டுள்ள URC கன்ஷ்ட்ரக்ஸன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதிநுட்ப நகர திட்டத்திற்கான அடிப்படைக் கட்டமைப்பு பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி 01.01.2023 அன்று கோரப்பட்டதில், நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகளின் ஆய்வின் போது, ஒப்பந்ததாரர் PST இன்ஜினியரிங் கன்ஷ்ட்ரக்ஸன் நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன் கட்டிய கே.பி. பார்க் (முதல்நிலை1) 864 EWS குடியிருப்பு கள் திட்டத்தில் கட்டுமானத்தின் தரம் குறித்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் சில புகார்கள் வந்த விவரமும் அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரின் பதிவை ஏன் தற்காலிக நிறுத்தம் / ரத்து செய்யக்கூடாது என காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டதும் டிட்கோவின் கவனத்திற்கு வந்தது. பிறகு இந்த விவகாரம் குறித்து PST இன்ஜினியரிங் கன்ஷ்ட்ரக்ஸன் நிறுவனம் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தை நாடியது என்றும் (வழக்கு எண். O.A.No.775/2021 in C.S.(Comm.) No.108 of 2021); மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது 02.12.2021 தேதியிட்ட ஆணையின் மூலம் மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை உத்தரவு (Interim Injunction) பிறப்பித்துள்ளது எனவும் அறிய வந்தது.

நிறுவனத்தின் பதிவை ரத்து செய்யும் குறிப்பாணைக்கான இடைக்கால தடை உத்தரவு, ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த நாள் அன்றும், ஒப்பந்தப் புள்ளி ஆய்வின் போதும் நடைமுறையில் இருந்த காரணத்தால், PST நிறுவனம் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படவில்லை. தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகளின்படி, ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்கும் நிறுவனம் கருப்புபட்டியலில் இருப்பது கண்டறிப்பட்டால் மட்டுமே, அந்நிறுவனம் தகுதி நீக்கம் செய்யப்படும். PST நிறுவனம் கருப்புப் பட்டியலில் இல்லாத நிலையில், PST நிறுவனமும் மற்றும் மற்ற இரு நிறுவனங்களும் சமர்ப்பித்த ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**விலைப் புள்ளிகள்!**

மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், துறையின் மதிப்பைவிட 16.34% குறைவாக, அதாவது 82.87 கோடி ரூபாய் (ஜி.எஸ்.டி உட்பட) மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த PST நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

இத்திட்டங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி தேர்வு முறைகள் அனைத்தும், ஆன்லைன் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்த தேர்வு முறையின் முடிவுகள், பொதுமக்கள் பார்வையிடும் வகையில், tntenders.gov.in என்ற இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஏல முறை தேர்வுகள் அனைத்தும் நியாயமான, ஒளிவுமறைவற்ற மற்றும் வெளிப்படையான முறையில் "ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைதன்மை சட்டம் மற்றும் விதிகளின்" அடிப்படையில் மட்டுமே நடைபெற்றது. மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஏல தேர்வு முறையில் தகுதியுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்கு பெறலாம்.

மேற்கூறிய இரண்டு பணி ஆணைகளும், துறை மதிப்பீடுகளை விட குறைவான மதிப்பீட்டில் வழங்கியதால், டிட்கோ நிறுவனத்திற்கு 36.15 கோடி ரூபாய் அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே இந்த ஏலமுறைகள், முழுமையான பங்கேற்பு, வெளிப்படையான போட்டித் தன்மையுடன் நடைபெற்றுள்ளது என்பதற்கு சான்றாகும்.

**இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்!**

2021க்கு பிறகு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) உள்ளிட்ட பல்வேறு துறைகளில், PST இன்ஜினியரிங் கன்ஷ்ட்ரக்ஸன் நிறுவனத்திற்கு பணிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடி துறைமுகத்திற்கு 6 வழி தேசிய நெடுஞ்சாலை 7A (புதிய தே.நெ.138) 130.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் EPC முறையில் அமைப்பதற்கான பணி ஆணையை 31.03.2023 அன்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கே.பி.பார்க் (முதல் நிலை1) 864 EWS குடியிருப்புகள் கட்டுவதில் கண்டறிப்பட்டுள்ள குறைபாடுகள் குறித்த சட்டபூர்வ நடவடிக்கைகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும், குறைபாடுகள் நிரூபிக்கபட்டால் ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகளின்படியும் மற்றும் ஒப்பந்த பணியின் நிபந்தனைகளின் படியும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக தண்டனை வழங்கப்படும் வகையிலான நடவடிக்கைகள் (Penal Action) மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை - பட்டினப்பாக்கம் துணை மின் நிலையம் ஆய்வு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கொண்டார்!

சென்னை, ஜூன் 22-

சென்னை, பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதை, சரிபார்க்கும் பணியை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார்.

சென்னை, பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தில் நேற்று முன்தினம் (20.06.2023) ஏற்பட்ட பழுதை, சரிபார்க்கும் பணியை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

19.06.2023 அன்று காலை 08.00 மணியளவில் பெய்த கனமழையின் காரணமாக பட்டினப்பாக்கம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் ஒரு 16 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றியில் ஏற்பட்ட பழுது காரணமாக அந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின் நுகர்வோர்களுக்கு அடுத்த 16 எம்.வி.ஏ. மின்மாற்றியில் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.

பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தை ஆய்வு செய்த அமைச்சர் பழுதான மின்மாற்றிகளை போர்க்கால அடிப்படையில் சரி செய்து கொண்டிருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை விரைந்து பணிகளை முடித்து இயக்கத்திற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்படும் 208 துணை மின் நிலையங்களில் 3 துணை மின் நிலையங்களும் 1857 மின் பாதைகளில் 49 மின் பாதைகளும் 35859 மின்மாற்றிகளில் 51 மின்மாற்றிகளும் பழுதடைந்தன. அனைத்து பழுது ஏற்பட்ட பகுதிகளுக்கும் 1 மணி நேர அளவில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டது. பழுதான மின்பாதைகள் சரிசெய்யப்பட்டு விட்டன, பழுதான மின் மாற்றிகள் இன்று மாற்றி அமைக்கப்பட்டுவிடும்.

சென்னையில் தண்ணீர் தேங்கும் இடங்களில் அமைந்துள்ள 4398 பில்லர் பாக்ஸ்கள் உயர்த்தப்பட்டது, 73 பில்லர் பாக்ஸ்களில் உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.

இத்தகைய மழைக்காலங்களில் அனைவரும் மிகுந்த கவனத்துடன் இருந்து உடனுக்குடன் சீரான மின்சாரத்தினை பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் எனவும், பொதுமக்களிடமிருந்து புகார் ஏதேனும் வரப்பெற்றால் அதனை அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

ஜூன் மாதத்தில் பெய்து இருக்கக்கூடிய திடீர் கனமழையின் காரணமாக மின் விநியோகம் பழுதடைந்திருக்கக் கூடிய இடங்களில் போர்கால நடவடிக்கையில் அவற்றை சீர் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே அறிவுறுத்திருக்கிறார்கள். திருவாரூரிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று பழுதடைந்த மின் மாற்றிகளாக இருந்தாலும் சரி, மின் பாதைகளாக இருந்தாலும் சரி; அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில் 19.06.2023 அன்று காலையில் பெய்த கனமழையின் காரணமாக பட்டினப்பாக்கம் துணைமின் நிலை யத்தில் இருக்கக்கூடிய 33/11 கி.வோ. 16 எம்.வி.ஏ மின் மாற்றி பழுதடைந்து அதன் காரணமாக மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக மற்றொரு 16 எம்.வி.ஏ மின்மாற்றி மூலமாக மின் விநியோகம் வழங்கப்பட்டது, தற்பொழுது அந்த மின் மாற்றியும் பழுதடைந்துவிட்டது. அதன் காரணமாக மின்சாரத்துறை துரித நடவடிக்கை எடுத்து மற்ற பகுதிகளின் மூலம் மாற்று மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கப்பட்டது. சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மூன்று துணைமின் நிலையங்கள், 49 மின் பாதைகள், 51 மின்மாற்றி கள் மற்றும் 27 பில்லர் பாக்ஸ்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

மழையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டிருந்தாலும் மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் போர்கால அடிப்படையில் இரவு, பகல் பாராமல் மழையோடே துரிதமாக செயல்பட்டு இரண்டு மணி நேரத்திற்குள் மின் விநியோகத்தை சீரமைத்தனர். தற்போது, பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தில் இன்று நேரில் ஆய்வு செய்தேன். இன்று மாலைக்குள் மின் விநியோகம் முழுவதுமாக சீரமைக்கப்படும். இதே போன்று நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடனடியாக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி சீரான மின் விநியோகம் வழங்க மின்வாரியம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த பாதிப்பானது திடீர் மழையின் காரணமாக ஏற்பட்ட மின் பளு மாறுபாடு மற்றும் தொழில்நுட்ப காரணமாக இருக்கலாம்.

தளவாட பொருட்களின் கொள்முதலைப் பொறுத்தவரை இந்த ஆட்சியில் தரத்தில் எந்தவித சமரசமும் ஏற்றுக்கொள்ளப்படாது. இந்த பாதிப்புகளை சரிசெய்ய தேவையான அனைத்தையும் உடனடியாக அளித்து மின் விநியோகத்தை சீரமைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மின் விநியோகத்தை சீரமைக்க தேவையான அனைத்து தளவாட பொருட்களும் கையிருப்பில் உள்ளது. ஸ்மார்ட் மீட்டர் வாங்குவதற்கான ஒப்பந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது, இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

பின்னர், மடிபாக்கம் ராம்நகர் பகுதியில் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான மின்பாதைகள் மற்றும் மின் கம்பிகளை சாலையின் ஓரமாக நகர்த்தும் பணியினை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்து மேற்கண்ட பணிகளை போர்கால அடிப்படையில் விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் உடன் இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. நாராயணன்

ஜூன் 22 (2014)



கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆதிரெங்கம் எஸ்.பி. முருகதாஸ்

ஜூன் 22 (2014)



இளமைக் காலம் முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு திருத்துறைப்பூண்டி பகுதியில் கழக வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்து, கழகத்திற்கு உறுதுணையாக இருந்தவர்.

கிளைச் செயலாளர், ஒன்றியப் பொறுப்பாளர், ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஒன்றியக்குழு உறுப்பினர், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதி சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் தன் உடல்நிலை பாதிக்கப்பட்டபோதும் பங்கேற்று சிறை சென்றவர். தனது பேச்சாற்றலால் கழக அரசின் திட்டங்களை மக்களிடம் எளிதாக கொண்டு சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.